Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of

# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப்பாடசாலை

## செயலட்டை - 07

பாடம்:-பொருளியல்

தரம் -12

2021. 06. 21 – 2021. 06. 25

Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

**தேர்ச்சி** 5.0:- பேரினப் பொருளாதாரச் செயற்பாட்டை கவனத்திற்கொண்டு தேசிய கணக்குகளை தயாரிக்கும் ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.6 :-** செலவீட்டு முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடு செய்யும் முறையையும் அதனுடன் தொடர்பான எண்ணக்கருக்களையும் ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** 5.7 :- தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவத்தையும் தேசிய கணக்கீட்டின் வரையறைகளையும் விளக்குவார்.

❖ **<u>செலவீட்டு அணுகுமுறையிலான தேசிய கணக்கீடு</u>**

குறித்த ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப்பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்படுகின்ற செலவினங்களை அடிப்படையாக் கொண்டு தேசிய கணக்கீட்டினை மதிப்பீடு செய்தலே செலவு அணுகுமுறையிலான தேசிய கணக்கீடு ஆகும்.

வருமான வட்டப் பாய்ச்சலில் செலவுப் பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்டு தேசிய கணக்கீட்டை மதிப்பீடு செய்யும் முறையாக இம்முறை காணப்படுகின்றது.

**<u>பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக</u>.**

1. மொத்த உள்நாட்டு செலவினுள் உள்ளடங்கும் அடிப்படையான செலவினக் கூறுகள் யாவை?

2. வீட்டுத் துறையின் இறுதி நுகர்வுச் செலவு, உண்மை இறுதி நுகர்வுச்செலவு என்பவற்றை வேறுபடுத்துக.

3. மொத்த நிலையான மூலதனவாக்கத்தில் உள்ளடங்குகின்ற கூறுகள் யாவை?

4. பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் என்பதனால் கருதப்படுவது யாது?

5. மூலவளங்கள் பயன்படுத்தப்படுகின்ற வழிமுறைகள் யாவை?

6. தேசிய கணக்கீட்டுத் தரவுகளின் பயன்பாடுகள் யாவை?

7. தேசிய கணக்கீட்டின் வரையறைகள் யாவை?

8. பசுமைத் தேசிய கணக்கு என்றால் என்ன?